




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவன தலைவர் திரு. இராஜேந்திர ரத்னு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், செயல் அலுவலர்களுக்கான "பேரூராட்சிகளில் பூஜ்ஜிய கழிவு நோக்கிய புனித பயணத்திற்கான மண்டல அளவிலான முன்னோடி பயிற்சி" கன்னியாகுமரி, ஒய்.எம்.சி.எ. அரங்கில் இன்று (09.08.2016) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. மகரபூஷணம் இ.ஆ.ப., ஆகியோர்கள் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 507/206 நாள்: 08.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**
**கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி**
**நிறுவன தலைவர் திரு. இராஜேந்திர ரத்னு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்**
**மற்றும்**
**பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. மகரபூஷணம் இ.ஆ.ப., ஆகியோர்கள் முன்னிலையில்,**
**செயல் அலுவலர்களுக்கான "பேரூராட்சிகளில் பூஜ்ஜிய கழிவு நோக்கிய**
**புனித பயணத்திற்கான மண்டல அளவிலான முன்னோடி பயிற்சி"**
**இன்று (09.08.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில், திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை, பேரூராட்சிகளில் திறம்பட செயல்படத்திட உத்தரவிட்டுளார்கள்.

அதனடிப்படையில் கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி நிறுவன தலைவர் திரு. இராஜேந்திர ரத்னு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. மகரபூஷணம் இ.ஆ.ப., ஆகியோர்கள் முன்னிலையில், செயல் அலுவலர்கள் மற்றும் பேரூராட்சி பணியாளர்களுக்கான, "பேரூராட்சிகளில் பூஜ்ஜிய கழிவு நோக்கிய புனித பயணத்திற்கான மண்டல அளவிலான முன்னோடி பயிற்சி", கன்னியாகுமரி ஒய்.எம்.சி.எ அரங்கில் இன்று (09.08.2016) நடைபெற்றது.

பயிற்சிக்கு திரு. இராஜேந்திர ரத்னு இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பல்வேறு முயற்சியால், 2011-ம் ஆண்டு முழு சுகாதார தமிழகம் என்று அறிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, கன்னியாகுமரியில், இரண்டு நாட்கள், திடக்கழிவு மேலாண்மை திட்டம், பேரூராட்சிகளில் கடைபிடிப்பது குறித்து பயிற்சி (09.08.2016 மற்றும் 10.08.2016) அளிக்கப்படுகிறது. இதில் உலர்கழிவு மேலாண்மை, ஈரக்கழிவுகள் மேலாண்மை, பிரித்து வைப்பு மற்றும் கழிவுகள் சேகரிப்பு, அபாயகரமான வீட்டுக்கழிவுகள், முன்மாதிரி வளம் மீட்பு பூங்கா, கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் குறித்து செயல் அலுவலர்கள், துப்புரவு அலுவலர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. குறிப்பாக இப்பயிற்சியில் வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றினால், கழிவுகளை நாம் எவ்வாறு குறைக்க முடியும் என்பதை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். மேலும் நம் முன்னோர்கள் பின்பற்றிய வழிமுறைகளை நாம் கடைபிடிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், நமது வீடு மற்றும் வீட்டு அருகில் உள்ள பகுதிகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக வீட்டில் உபயோகிக்கப்படும் பொருட்களிலிருந்து

பெறப்படும் கழிவுகளை குறைத்து வந்தால், சுற்றுசூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளை நிச்சயமாக குறைக்க முடியும். அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, நமது மாவட்டத்தில் உள்ள 55 பேரூராட்சிகளில் தற்போது 49 பேரூராட்சிகளுக்கு, திடக்கழிவுகளை சேகரிப்பதற்காகவும், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தனித்தனியாக பிரிப்பதற்கு, இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் உள்ள 95 ஊராட்சிகளிலும் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லை என்ற நிலையை அடைந்துள்ளோம். மேலும் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் இந்த நிலையை அடைவதற்காக, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக எந்தவொரு திட்டம் அரசால் செயல்படுத்த தொடங்கினால், அதற்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும். மேலும் சுயஉதவி உறுப்பினர்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் இங்கு பயிற்சி பெறும் அனைத்து அலுவலர்களும் இத்திட்டத்தை பற்றி, பொதுமக்களிடையே விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பேரூராட்சிகளின் இயக்குநர் திரு. மகரபூஷணம் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

எந்தவொரு பொருட்களையும் முழுமையாக பயன்படுத்தி கொண்டால், நிச்சயமாக கழிவுகள் குறைக்கப்படும். அதுமட்டுமல்லாமல் சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணிகாக்கப்படும். அதற்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக வீட்டில் நாம் உண்ணும் பொருட்களில் ஒன்றான கருவேப்பிலை, வெங்காயம் போன்ற காய்கறி பொருட்களில் உள்ள ஊட்டச்சத்து மற்றும் நோய் எதிர்ப்பு சத்து, நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதைபோல் ஒவ்வொரு காய்கறி பொருட்களிலும் பல்வேறு விதமான ஊட்டச்சத்துகள் உள்ளது. இதனையும் நீங்கள் தெரிந்து கொள்வதோடு, மற்றவர்களுக்கும் எடுத்து கூற வேண்டும். இவ்வாறு செய்து வந்தால், கழிவுகள் கொட்டுவது குறைக்கப்படும். மேலும் இன்று அளிக்கப்படும் பயிற்சியில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால், அதனை உடனடியாக தெரிவுபடுத்தி கொள்வதோடு, உங்களது கருத்துக்களையும் பதிவு செய்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார்.

பயிற்சியில் இணை இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. மலைமான் திருமுடி காரி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திரு. இரா. முத்துக்குமார், அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.